
# அவர் மேல் சிந்தையாயிருங்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

# தேவதூதர்கள் உங்களுக்கு காட்சி கொடுக்க வேண்டுமென்றால், தேவனை உங்கள் சிந்தையில் வைத்து, உலகத்தின் காரியங்களை விட்டு விலகி இருங்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 59-11-26 அற்புதங்களின் யேகோவா

*16. இப்பொழுது, பரிசுத்த லூக்கா புஸ்தகம், 36-ம் வசனத்திலிருந்து நாம் வாசிப்போம்.*

**இதோ, உனக்கு இனத்தாளாயிருக்கிற எலிசபெத்தும் தன் முதிர்வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்பந்தரித்திருக்கிறாள்; மலடியென்னப்பட்ட அவளுக்கு இது ஆறாம் மாதம்.**

**தேவனாலே கூடாதகாரியம் ஒன்று மில்லை என்றான்.**

**அதற்கு மரியாள்: இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது**

**என்றாள். அப்பொழுது தேவதூதன் அவளிடத்திலிருந்து போய்விட்டான்.**

*17. அது நிச்சயமாகவே... அப்பொழுது தான் சூரியன் உதயமாகி யூதேயாவின் வானங்களில் பிரகாசிக்க மேலேறி தனது பிரகாசத்தை கலிலேயா மீது பிரதி பலித்துக் கொண்டிருந்த போது, ஒரு சிறு கன்னி, வீதியிலே நடந்து சென்று கொண்டிருந்தாள். அவள் தன் கரங்களின் கீழ் தண்ணீர்க்குடம் வைத்திருந்தாள். நிச்சயமாகவே அது ஓய்வுநாளுக்கு அடுத்ததான திங்கட்கிழமையாக இருந்திருக்கும். அந்த நாளுக்குத் தேவையான தண்ணீரை பெறும்படி அவள் அந்த பொது கிணற்றுக்கு செல்லும் வழியில் இருந்தாள். இன்றிரவு நாம் அவளைக் குறித்துப் பார்க்கையில், அவள் தலை குனிந்தவாறு நடந்து சென்று கொண்*

டிருந்தாள். அவள் பதினெட்டு வயதை பூர்த்தி செய்யாத ஒரு இளம்பிள்ளை யாய் இருந்தாள். அவள் பார்ப்பதற்கு, ஒரு ஆழமான பொருளைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தவளைப் போலக் காணப்பட்டாள்.

அவள் யோசேப்பு என்கிற ஒரு இளம் வாலிபனுக்கு நிச்சயிக்கப்பட்டிருந் தாள். அவன் ஒரு தச்சனாயிருந்தான், அச்சமயத்தில் அவன் ஒரு சிறப்பு கவனம் ஈர்க்கத்தக்கதான ஒரு சிறு வீட்டை, தானும் தன் அன்பான சிறிய மனைவி மரியாளும் வசிப்பதற்கென்று கட்டிக் கொண்டிருந்தான். மேலும், அது எல்லாவிதத்திலேயும் சிறப்பானதாக இருக்க வேண்டியதாயிருந்தது. ஒவ் வொரு நாளும் அவள், யோசேப்பு மதிய உணவு எடுக்கும் வேளையில்

அவனிடம் வந்து, அவனோடு பேசி, அந்த வீட்டின் அமைப்பைக் குறித்து அளவளாவி, அந்த சிறிய கதவுகள் எப்படி பொருத்தப்பட வேண்டுமென் றும் பேசுவாள். அது ஒரு சிறப்பு மிக்க வீடாய் இருக்க வேண்டியதாயிருந்தது.

மரியாள் வசித்த இடமானது, சமவெளி யினூடாக ஒரு மலைப்பாங்கான இடமா யிருந்தது. ஞாயிறு ஆராதனைகளுக்குப் பிறகு அவர்கள் வீட்டின் முன்தாழ்வா ரத்தில் அமர்ந்து, தங்கள் இரவு உண விற்குப் பிறகு, அந்த பசுமையான மற்ற மலைப்பிரதேசத்தை நோக்கி பார்த்து, அங்கே உள்ள வீட்டின் முக்கோணச் சுவரை கவனித்தவாறு, எதிர்காலத்தில் தாங்கள் செய்ய வேண்டிய காரியங் களைக் குறித்து திட்டம் பண்ணுவார் கள்.

*18.* முந்தின ஞாயிறு, நாசரேத்தி லுள்ள ஜெப ஆலயத்தில், அது வழக் கத்திற்கு மாறான ஞாயிறாக அமைந் திருந்தது. நல்ல போதகர் ஒரு வல்லமை யான செய்தியைப் பிரசங்கித்திருந்தார். அவர் ஆபிரகாமின் மகத்தான தேவ னைக் குறித்தும், எப்படியாக எகிப்திலே தம்முடைய பிள்ளைகளை சந்திக்கும் நாட்களில், எப்படியாக ஒரு வல்லமை யுள்ள கரத்தினால் அவர் அவர்களை வெளியே அழைத்துக் கொண்டு வந்தார் என்றும், எப்படியாக அவர் தம்மை வானங்களையும் ஆள்பவராக காண்பித் தார் என்றும், எப்படியாக தண்ணீரானது பூமியையும் அவருடைய வழியில் குறுக்கே நிற்க முடியவில்லை என்றும், அவருடைய தெய்வீக சித்தத்தைத் தடுக்க எதுவும் கிடையாது என்றும், எப்படியாக பிரயாணத்தில் உணவில்லாத

தம்முடைய பிள்ளைகளைப் போஷிக்க தம்முடைய சொந்த கரங்களால் இரவில் அப்பமாகிய உணவை வெளியிலே தூவினார் என்றும் பிரசங்கித்திருந்தார். மேலும் அவர், ஜனங்களுக்கு இறைச்சி இல்லாதிருந்த நேரத்தில், எப்படியாக கர்த்தராகிய யேகோவா தேவன் ஒரு பெருங்காற்றை வீசச் செய்து, ஆயிரக் கணக்கான காடைகளை பாளயம் எங்கும் விழும்படி செய்தார் என்பதை யும் மேற்கோள் காட்டினார். ஒவ்வொரு இஸ்ரவேலனும் தங்கள் கரங்களைத் தவிர வேறொன்றையும் (வேறு எந்த ஆயுதங்களையும்) பயன்படுத்தாமல் அவ்வளவான காடைகளைப் பிடித்து அவைகளை சமைத்து தங்களுக்கு வேண்டியமட்டும் சாப்பிட்டார்கள்.

இந்த இடத்தைக் குறிப்பிட்டு யோசேப்பு, “அன்பே, அந்த ஜனங்களை போஷிக்க, எவ்வளவு காடைகள் தேவைப்பட்டிருக்கும் என்பதை நீ யோசித்துப் பார்த்தாயா?” என்று நிச்சயம் கேட்டிருப்பான். ஏனென்றால், பாளயத்தில் கிட்டத்தட்ட இருபத்தைந்து லட்சம் ஜனங்கள் இருந்தார்கள். ஒரு மனிதன் எளிதாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காடைகளை திருப்தியாக சாப்பிட முடியும். எனவே, ஐம்பது லட்சம் காடைகளுக்கு மேலாக தேவைப்பட்டிருக்கும். ஆனால், அவரோ சிருஷ்டிகர், யேகோவா. எவ்வளவாக அவரால் காடைகளை சிருஷ்டிக்க முடிந்தது. பாலஸ்தீனா முழுதும் அல்லது வனாந்திரம் முழுதும் கூட ஐம்பது லட்சம் காடைகள் இருந்திருக்காது; ஆனால் அவரோ, அவைகளை அங்கே சிருஷ்

டிக்க முடிந்த யேகோவா தேவனாக இருந்தார். அங்கே ஒன்று கூட இல்லா மல் இருந்திருந்தாலும், அவைகளை அவரால் சிருஷ்டித்திருக்க முடியும், ஏனென்றால், ஆபிரகாமின் நாட்களில் அவர் அதையே செய்தார், அந்த மலை யின் மேல், ஆபிரகாம் அவரை யேகோவா-யீரே--"தமக்கு தேவையான எதையும் கர்த்தர் தந்தருளுவார்" என்று அழைத்த போது தேவன் அதையே செய்தார்.

***19.*** பின்னர், யோசேப்பு நிச்சயமாக இவ்வாறாக கூறியிருப்பான், அதாவது, "செய்தியானது உறைக்கத் தக்கதாய் இருந்தது, ஆனால், இறுதியிலோ ரபீ, 'யேகோவா அற்புதங்களை செய்து வந்தார் என்பது உண்மைதான், ஆனால் அந்தோ, இன்றைக்கு யேகோவா

அற்புதங்களையெல்லாம் செய்வது கூட கிடையாது, அந்த நாட்களெல்லாம் வெகு காலத்திற்கு முன்பே முடிந்து விட்டது. யேகோவா நம்மிடம் எதிர் பார்ப்பதெல்லாம் நாம் சபைக்குச் சென்று, செலுத்த வேண்டியதைச் செலுத்தி, ஒரு நல்ல எளிமையான வாழ்க்கையை வாழ்வதே' என்று கூறின போது, அந்த ரபீ செய்தியை பாழ்ப் படுத்தி விட்டார் என்றே நான் நினைத் தேன்.” மேலும் யோசேப்பு, "நான் அந்த ரபீயோடு ஒத்துப்போகவில்லை, ஏனென் றால், அவர் தேவனாயிருந்தால், அவர் மாறாத அதே தேவனாகத் தான் இருக்க வேண்டும். அவர், யேகோவா-யீரே அவர்களுடைய தேவைகளெல்லாம் பார்த்துக் கொள்வார் என்றால், நம்மு டைய தேவைகளையும் அவர் பார்த்துக் கொள்வார்” என்று நிச்சயமாக கூறியிருப்

பான். எவ்வளவாக யோசேப்பின் கூற்றுக்கு நான் 'ஆமென்' என்று உரக்கச் சொல்ல விரும்புகிறேன்!

*20.* மரியாள் வீட்டிற்கு வந்து, ஒரு சுருளை எடுத்து, வழக்கமான அவர்களுடைய ஞாயிறு பிற்பகல் வேதாகமப் பாடத்திற்காக அதை வெளியே எடுத்தாள். அன்றையதினம் அவள் வெளியே எடுத்து கொண்டு வந்த சுருளானது ஏசாயா புஸ்தக சுருளாயிருந்தது. அதை விரித்து மரியாளுக்கு வாசித்து அதன் கருத்தை கூறும் நோக்கில், அவன் அந்த புஸ்தக சுருளை எடுத்து பிரித்தான். இறுதியில் அவன் ஏசாயா புஸ்தகம் *9:6*-க்கு வந்தான், -- "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம்

அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்."

அவன் அதை வாசித்து கொண்டிருக் கையில், பெருமூச்சின் சத்தத்தைக் கேட்டு, திரும்பி பார்த்தான்; அவனு டைய இனிய இதயமாகிய அந்த சிறு பெண்மணியினுடைய முகம் பிரகாச மடைந்து, இருளான இரவில் காணப் படும் நட்சத்திரங்களைப் போல அவளு டைய கண்கள் பளபளக்கும் நிலையில் அவள், “அன்பே, மீண்டும் அதைப் படி யுங்கள்" என்றாள். அவன் அதை மீண் டும் படித்தான். அவள், "அது யாராக இருக்கக்கூடும்? தீர்க்கதரிசி எதைக் குறித்துப் பேசுகிறார்?" என்று நிச்சயமாக கேட்டிருப்பாள்.

அதற்கு அவன், "தீர்க்கதரிசி வரப் போகிற மேசியாவைக் குறித்து பேசிக் கொண்டிருந்தார், மேலும், என்றாவது ஒரு நாள் நமது ஸ்திரீகளில் ஒருவர் மேசியாவைப் பெற்றெடுப்பாள்" என்று கூறியிருப்பான் அல்லது அதைப் போன்று கூறியிருப்பான். அந்த வேத வாக்கியம் அந்த சிறு கன்னியை பற்றிப் பிடித்தது போல காணப்பட்டது; அவ ளால் அதை விட்டு வெளியேற முடிய வில்லை.

*21.* அன்றுக் காலையில், தண்ணீர் எடுக்கும்படியாக கிணற்றுக்குச் செல்லும் வழியில், ஒருவேளை அந்தக் காரியங் களைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருப் பவளாக நாம் அவளைக் காண்கிறோம். அது திங்கட்கிழமையாக இருக்கலாம் சலவை செய்யும் நாளாக என்று நான்

கூறுவேன். அது இருந்தது, எனவே, அவள் நேரமே சென்று சலவை செய்யும் படியாக தண்ணீரைப் பெற வேண்டிய தாயிருந்தது; அவளது தாயார் வயது சென்றவளாய் இருந்தாள்.

"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட் டார்; கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும்; அவர் நாமம் அதிசய மானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்" என்ற வேதவாக்கியத்தை நினைத்துக் கொண்டே இருந்த அவள், அந்த மூலையில் திரும்ப வேண்டும் என்பதை மறந்து போகும் அளவிற்கு, அவ்வளவாக அவள் யோசித்துக் கொண்டிருந்தாள் அல்லது அவளுக்கு கூறப்பட்ட காரியத்

தில் அவள் ஆர்வம் கொண்டிருந்தாள். அவள் தன் தலையை உயர்த்திப் பார்த்த போது, அங்கே ஒரு விசித்திரமான காரியம் இருந்தது, ஒரு ஒளிவெள்ளம் வந்ததை போல காணப்பட்டது. இன் றைக்கும் இருக்கின்றதான அந்த கன்னி யின் கிணறு (மரியாளின் கிணறு) என்று அழைக்கப்படும், பட்டண சதுக்கத்தில் உள்ள அந்த கிணற்றை நோக்கி அவள் திரும்பினாள். "ஓ! மலையின் மேல் இருக்கும் பனியில் சூரிய ஒளி பிரதி பலிக்கிறது அல்லது மெருகேற்றப்பட்ட ஏதோ ஒரு உலோகத்தில் பட்டு பிரதி பலிக்கிறது அல்லது ரோமப் போர்ச் சேவகனின் கேடயமாக இருக்கலாம்; அதைத்தான் ஒருவேளை என் கண் களுக்கு முன்பாக மின்னுவதாகக் கண் டேன்'' என்று அவள் நிச்சயம் நினைத்

*திருப்பாள். எனவே, தனது ஆழ்ந்த யோசனைக்குள் தொடர்ந்து சென்றாள்.*

***22.*** *ஓ! நாம் செய்வதை விட அதிகமாக இன்றைக்கு சபையானது ஆவிக்குள்ளாக நடக்காமலிருப்பது மிகவும் மோசமான காரியமாயிருக்கிறது. ஏனென்றால் இது, தேவன் உங்களிடம் வருவதற்கான அப்படிப்பட்டதான ஒரு நேரத்தைப் போல இருக்கிறது. கிலெயோப்பா என்பவனும் அவனது நண்பனும் எம்மாவூருக்கு போகும் வழியில் இயேசுவைப் பற்றி பேசிக் கொண்டும், சம்பாஷித்துக் கொண்டும் செல்கையில், அவர்கள் அருகே இருந்த புதர்களினூடாக நடந்து, அவர்களோடே கூட அவர் நடந்து சென்றார்.*

**நாம் அவர் மீது சிந்தையுள்ளவர்களாயிருக்கையில்... இன்றைக்கு உலகத்தி**

**லுள்ள தொல்லை என்னவெனில், அவரைத் தவிர மற்றெல்லாவற்றையும் குறித்து நாம் சிந்திக்கிறோம்.**

*ஒரு சில வாரங்களுக்கு முன்பு, சுமார் மூன்று வாரங்களுக்கு முன்பு, நான் அத்தி மரத்தின் கீழாக இருந்த போது, நான் உங்களுக்கு சொல்லிக் கொண்டிருந்தபடி, சிந்திக்கத் துவங்கினேன். அங்கே அவர் வந்து என்னுடைய புதிய ஊழியத்தைக் குறித்து அறிவித்தது அதுவே முதன்முறையாக இருந்தது.*

**அவர் மேல் சிந்தை வையுங்கள். கர்த்தர், "என்னிடத்தில் சேருங்கள், அப்பொழுது நான் உங்களிடம் சேருவேன்" என்றார். அவர் மேல் சிந்தையாயிருங்கள்.**

தாவீது இவ்விதம் கூறினான்... கட்டில் தாங்கியில் *(bed post)* அவருடைய கட்டளைகளை எழுதிவைத்து, இரவும் பகலும் அதன் மேல் தியானமாயிருந்தான். அதைத் தான் சபையானது செய்ய வேண்டும், உங்களது இருதயத்தை இரவும் பகலும் தேவனோடு ஒத்திசைந்திருக்குமாறு வைத்திருக்க வேண்டும், ஏனெனில், அப்பொழுது தான் அவர் காட்சி தருவார்.

சாலொமோன், "அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்" என்றான்.

**நீங்கள் அவருடைய பிள்ளைகளில் ஒருவர், அவர் உங்களை இரட்சித்தார், அவர் உங்களுக்கு நல்லவராக இருக்கிறார், மேலும், அவர் உங்களை நேசிக்கிறார் என்று சிந்திக்கத் தொடங்குங்கள்.**

**சபைக்குப் போகும் வரை நீங்கள் காத்திருக்க வேண்டாம், அல்லது உகந்த மணிநேரம் வரும் வரை நீங்கள் காத்திருக்க வேண்டாம்; எல்லா நேரங்களிலும் அவரை சிந்தையில் கொண்டிருங்கள்.**

*23. அவள் வீதியில் நடந்து கொண்டே சென்ற பொழுது, வீதியில் ஒருவரும் காணப்படவில்லை. பக்கவாட்டிலுள்ள சிறிய அழுக்கான பாதையில் அவள் நடந்து வந்த போது, திடீரென்று தன்னை சுற்றி ஏதோவொன்று இருப்பதை உணர்ந்தாள், உண்மையாகவே அது ஒரு விசித்திரமான உணர்வாக இருந்தது.*

*ஓ, அது மிகவும் அற்புதமான அனுபவம். அதைப் போன்ற நேரங்களை இங்கிருக்கிற ஒவ்வொருவரும் அனுபவித்*

திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். நம்புகிறேன். நீங்கள் அதைப் பெற் றிருக்கவில்லை என்றால், அதை துவக் குவதற்கான நல்ல இரவு இதுவே.


**வெறுமனே அவரைக் குறித்து சிந் திக்க துவங்கி, உங்களுடைய இருதயத் தில் அவரை ஆராதனை செய்யுங்கள், அப்பொழுதே, உங்களைச் சுற்றி பரிசுத்த ஆவியின் நெருங்கிய ஐக்கியத்தை உணருவீர்கள்.**

**அது நீங்கள் தாங்க முடியாத அளவிற்கு அவ்வளவாக அபிஷேகிக்கப் படுகிறது. நீங்கள் உங்கள் கரங்களை உயர்த்துவீர்கள் மற்றும் அல்லது ஏதோ வொன்றை செய்வீர்கள். அது வரும் போது நீங்கள் அமைதியாக தரித்திருக்க முடியாது.**

*24.* அவள் சிந்தித்துக் கொண்டே, தன்னைச் சுற்றி யார் இருந்தாலும் அதை பொருட்படுத்தாமல், ஒருவேளை அந்த சிறிய பெண்மணி தனது பாதங்களில் ஒரு ஜோடி பாதரட்சைகளை அணிந்தவளாய், இந்த அழுக்கான பாதையில் நடந்து கொண்டு போயிருக்கலாம், ஆனால், அவளோ கர்த்தரைப் பற்றியும், நிகழப் போகின்றதான அவருடைய வாக்குத்தத்தங்களைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருந்தாள். அவள் தன் தலையை நிமிர்ந்து பார்க்கும் வரை, அந்த உணர்வானது திடீரென்று அவளை அவ்வளவாய் ஆட்கொண்டது. அவள் நிமிர்ந்து பார்த்த போது, அவளுக்கு முன்பாக ஒரு வெளிச்சம் நின்று கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தின் பக்கத்தில், பிரதான தூதனாகிய காபிரியேல் நின்று கொண்டிருந்தான்.

**தேவதூதர்கள் உங்களுக்கு காட்சி கொடுக்க வேண்டுமென்றால், தேவனை உங்கள் சிந்தையில் வைத்து, உலகத்தின் காரியங்களை விட்டு விலகி இருங்கள்.**

வேலைக்குச் செல்லுங்கள்; சபைக்குச் செல்லுங்கள்; பாத்திரம் துலக்கச் செல்லுங்கள்; நீங்கள் எங்கே இருந்தாலும், பகல் முழுதும், இரா முழுதும் அவர் மேல் சிந்தையாயிருங்கள். அப்பொழுது தேவன் ஏதோவொன்றைச் செய்வார். அவருக்கு நெருக்கமாக நீங்கள் இழுக்கப்படுகிறீர்கள். நீங்கள் உலகத்தின் பக்கத்தை அடைத்து விட்டீர்கள்; நீங்களும் அவரும் மாத்திரம் ஒன்றாக இருக்கிறீர்கள்.


அவர் அவர்களுக்குக் காட்சியளிக்கும்
போது அவர்கள் அவரைக் குறித்துப் பேசிக்
கொண்டிருந்தனர்

---

## செய்தி: 64-04-16 அவர்கள் கண்கள் திறக்கப்பட்டபோது அவர்கள் அவரைக் கண்டு கொண்டனர்

---

*81. அவர்கள் அந்த வழியிலே, இருந்ததை கவனியுங்கள், அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தனர்?*

*இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிற நீங்கள், கூர்ந்து கவனிக்க வேண்டு மென்று விரும்புகிறேன்.* **அவர் அவர்க ளுக்குக் காட்சியளிக்கும் போது அவர் கள் அவரைக் குறித்துப் பேசிக்கொண் டிருந்தனர்.**

*82.* **இப்பொழுது, அதாவது அவரைக் குறித்து நீங்கள் பேசும்போது அவர்**

**அவ்விதமாகத்தான் வருகிறார்,** இன்றைக்கு இருக்கிற தொல்லை என்னவென்றால் அவரைக் குறித்துப் பேசுவதை விட்டு மற்றெல்லா காரியத்தைக் குறித்தும் நாம் பேசுகிறோம்.

அவருக்கு துதியையும், மகிமையை யும் செலுத்தவேண்டிய நேரத்தில் எப் பொழுதுமே நாம் செய்யவேண்டிய ஒரு வியாபாரம் குறித்து காரியங்களையோ அல்லது துணி துவைப்பதைக் குறித்தோ அல்லது எந்தவகை சலவைத்தூள் உப யோகிக்க வேண்டும் என்றோ பேசுகி றோம்.

"நம்முடைய பொக்கிஷம் எங் கேயோ, அங்கே நம்முடைய இருதய மும் இருக்கிறது."

## லூக்கா 24:13-35

13. அன்றையத்தினமே அவர்களில் இரண்டுபேர் எருசலேமுக்கு ஏழு அல்லது எட்டுமைல் தூரமான எம்மாவு என்னும் கிராமத்துக்குப் போனார்கள்.

14. போகையில் இந்த வர்த்தமானங்கள் யாவையுங்குறித்து அவர்கள் ஒருவரோ டொருவர் பேசிக்கொண்டார்கள்.

15. இப்படி அவர்கள் பேசி, சம்பா ஷித்துக்கொண்டிருக்கையில், இயேசு தாமே சேர்ந்து அவர்களுடனேகூட நடந்து போனார்.

16. ஆனாலும் அவரை அறியாதபடிக்கு அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந் தது.

17. அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நீங்கள் துக்கமுகமுள்ளவர்களாய் வழிநடந்து, ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளுகிற காரியங்கள் என்னவென்று கேட்டார்.

18. அவர்களில் ஒருவனாகிய கிலெயோப்பா என்பவன் பிரதியுத்தரமாக: இந்நாட்களில் எருசலேமிலே நடந்தவைகளை அறியாதபடிக்கு நீர் அந்நியராயிருக்கிறீரோ என்றான்.

19. அவர்: எவைகள் என்றார். அதற்கு அவர்கள்: நசரேயனாகிய இயேசுவைக் குறித்தவைகளே; அவர் தேவனுக்கு முன்பாகவும் ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செய்கையிலும் வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார்.

20. நம்முடைய பிரதான ஆசாரியரும் அதிகாரிகளும் அவரை மரண ஆக்கினைக் குட்படுத்தி, சிலுவையில் அறைந்தார்கள்.

21. அவரே இஸ்ரவேலை மீட்டிரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம். இவைகள் சம்பவித்து இன்று மூன்று நாளாகிறது.

22. ஆனாலும் எங்கள் கூட்டத்தைச் சேர்ந்த சில ஸ்திரீகள் அதிகாலமே கல்லறையினிடத்திற்குப்போய்,

23. அவருடைய சரீரத்தைக் காணாமல், திரும்பிவந்து, அவர் உயிரோடிருக்கிறார் என்று சொன்ன தேவதூதரைத் தரிசித்தோம் என்று சொல்லி, எங்களைப் பிரமிக்கப் பண்ணினார்கள்.

24. அப்பொழுது எங்களிலே சிலர் கல்லறையினிடத்திற்குப் போய், ஸ்திரீகள்

சொன்னபடியே கண்டார்கள்; அவரையோ காணவில்லை என்றார்கள்.

25. அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே,

26. கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா என்று சொல்லி,

27. மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்.

28. அத்தருணத்தில் தாங்கள் போகிற கிராமத்துக்குச் சமீபமானார்கள். அப்பொ

ழுது அவர் அப்புறம் போகிறவர் போலக் காண்பித்தார்.

29. அவர்கள் அவரை நோக்கி: நீர் எங்களுடனே தங்கியிரும், சாயங்காலமா யிற்று, பொழுதும் போயிற்று என்று அவரை வருந்திக் கேட்டுக்கொண்டார்கள். அப்பொ ழுது அவர் அவர்களுடனே தங்கும்படி உள்ளே போனார்.

30. அவர்களோடே அவர் பந்தியிருக் கையில், அவர் அப்பத்தை எடுத்து, ஆசீர் வதித்து, அதைப்பிட்டு, அவர்களுக்குக் கொடுத்தார்.

31. அப்பொழுது அவர்களுடைய கண் கள் திறக்கப்பட்டு, அவரை அறிந்தார்கள். உடனே அவர் அவர்களுக்கு மறைந்து போனார்.

32. அப்பொழுது அவர்கள் ஒருவரை யொருவர் நோக்கி: வழியிலே அவர் நம்மு டனே பேசி, வேதவாக்கியங்களை நமக்கு விளங்கக்காட்டினபொழுது, நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா என்று சொல்லிக்கொண்டு,

33. அந்நேரமே எழுந்திருந்து, எருசலே முக்குத் திரும்பிப்போய், பதினொருவரும் அவர்களோடிருந்தவர்களும் கூடியிருக்கக் கண்டு:

34. கர்த்தர் மெய்யாகவே உயிர்த் தெழுந்து சீமோனுக்குத் தரிசனமானார் என்று அவர்கள் சொல்லக்கேட்டு,

35. வழியில் நடந்தவைகளையும், அவர் அப்பத்தைப் பிட்கையில் தாங்கள் அவரை அறிந்துகொண்டதையும் விவரித்துச் சொன் னார்கள்.

That's what's the matter with the world today, we got our mind on the things of the world instead of on God, let's think about God.



Rev. William Marrion Branham

---

42 And he got to thinking about, while he was setting there in the warm sunshine, his ragged coat wrapped around him, he begin to think about his dream, how real it was. Then his mind floated back in a daydream, like I know we all have those experiences.

43 **Many times, I could climb so high in the mountain till I'm out of hearing distance from any, anything, just set up there only with the—the animals, and dream, oh, just dream of God, and the**

**Coming of the Lord, and look out and hear Him scream in the birds, and watch Him in the eagles, and see Him in the sunrise and sunset; He's just all around you. Be alone and dream.**

44 So Bartimaeus, perhaps, was setting out there in a dream, like that.

*61-0124 — Blind Bartimaeus*

---

109 Then he remembered another story, that while they were encamped out there, Israel, God's great Pillar of Fire hanging over them, one day Joshua, the great captain, walked out to view his, get

his, a strategy on how to take those walls out of the way, Jericho. While he was walking around, he seen Someone walking out to meet him, It was another Warrior. Joshua pulled his sword, because he was a fighter, he swung his sword up, and he said, “Are You for us, or are You for our enemy?”

110 Then that great Fellow pulled His sword, and the lightning flew off the end of it, He said, “I’m the Captain of the host of the Lord. I’m the Lord’s Captain.”

111 The great, mighty Joshua throwed down his shield, throwed

down his sword, took off his helmet, and fell at His feet.

112 Oh, he might have said, "If I would have lived in them days I would have liked to fell before His feet, too." But little did he know that that same Captain of the host of the Lord, not a hundred yards from him, same Captain, while he was thinking on those things.

113 **It's usually when you think about the Lord, it's usually when you got your mind, not on something else, the things of the world, or how you're going to make a lot of money, or what kind**

**of a big organization you're going to build…**

114 **That's what's the matter with the world today, we got our mind on the things of the world instead of on God, let's think about God.**

**The Bible said, "There be any praise, there be any virtue, think on these things."**

Our mind strolls off, and first thing you know, we strayed out in there somewhere, we're thinking about something else.

**Let's keep Jesus on my heart, in my mind all day long, day and night. That's the way.**

115 **While he was thinking about that, he heard a noise. It's strange, wherever Jesus is there's a lot of noise.** I don't know why, but it usually is. And a lot of noise come from on the inside. First thing, the gate burst open, and hears a great noise, and people running, and some hollering, "Hosanna, Hosanna to the Prophet of Galilee!" The women, and some of the men.

*61-0124 — Blind Bartimaeus*


அவர் மேல்
சிந்தையாயிருங்கள்
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து